## சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு நீதிமன்ற அமைச்சுப் பணி - திரு.R.வெங்கடேஷ். இளநிலை உதவியாளர் (த/பெ. மருத்துவ இயலாமை காரணமாக ஓய்வு பெற்ற அலுவலக உதவியாளர் திரு.ரவீந்திரநாத்) என்பவர் கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக 14.03.2016 முற்பகல் பணி நியமனம் செய்யப்பட்டது - தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவுகள் 15 மற்றும் 28 (2) ஆகியவற்றை தளர்த்தி - பணிவரன் முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**உள் (நீதிமன்றங்கள்-5) துறை**

அரசாணை (நாற்பதாண்டுகள்) எண்: 55

நாள் 12.10.2022
சுபகிருது - புரட்டாசி 25,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்:48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ-1) துறை, நாள் 26.02.2021
2. பதிவாளர் (மாவட்ட நீதித்துறை), உயர்நீதிமன்றம், சென்னை அவர்களின் கடிதம் ROC. எண்: 8874/2018/C4, நாள் 17.09.2019.

*****

ஆணை :

பதிவாளர் (மாவட்ட நீதித்துறை), உயர்நீதிமன்றம், சென்னை, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், திருநெல்வேலி நீதித்துறை நடுவர் நீதிமன்றம்-2ல் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து மருத்துவ இயலாமை காரணமாக 30.04.2014 பிற்பகலில் ஓய்வு பெற்ற திரு.ரவீந்திரநாத் என்பவர் தனது மகன் திரு.R.வெங்கடேஷ்

என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 09.03.2015-ல் அளித்த விண்ணப்பம் மற்றும் வழக்கு எண். W.P.(MD). No.3909/2016, நாள் 25.02.2016-ல் உயர்நீதிமன்ற மதுரை கிளையால் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், திருநெல்வேலி முதன்மை மாவட்ட நீதிபதியின் செயல்முறை ஆணை எண் ANo.555/2015, நாள் 11.03.2016-ன்படி தனியர் 14.03.2016 முற்பகல் முதல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார் எனவும், எனவே, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.R.வெங்கடேஷ் என்பவரின் பணியினை, அவரது பணி நியமன நாளான 14.03.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உரிய ஆணைகள் வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பதிவாளர் (மாவட்ட நீதித்துறை), உயர்நீதிமன்றம், சென்னை அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்க முடிவு செய்துள்ளது. மருத்துவ இயலாமை காரணமாக 53 வயதினை கடந்து ஓய்வு பெற்ற அரசு ஊழியர் திரு.ரவீந்திரநாத் என்பவரால் அவரது மகன் திரு.R.வெங்கடேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியனம் வழங்கக் கோரி அளிக்கப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் திரு.R.வெங்கடேஷ் என்பவருக்கு வழங்கப்பட்ட பணி நியமனம், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15 மற்றும் பிரிவு 28(2)க்கு முரணானது என்பதால். தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58-ன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி மேற்காண் சட்டப்பிரிவுகளை தளர்வு செய்து, திரு.R.வெங்கடேஷ் என்பவரின் பணியை அவர் பணிநியமனம் செய்யப்பட்ட நாளான 14.03.2016 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன் முறைப்படுத்தப்படுவதால் தனியருக்கு வழங்கப்பட வேண்டிய ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் இதரப்படிகள், நிலுவைத்தொகை ஏதேனுமிருப்பின் அவற்றை பெற விதிகளின்படி அவர் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை மனித வள மேலாண்மைத் துறை மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை ஆகியவற்றின் இசைவினை முறையே அ.சா.கு.எண்.3114744/G2/2022, நாள் 29.09.2022 மற்றும் அ.சா.கு.எண் 16752/க்யூ1/2022-1, நாள் 10.10.2022-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

K. பனீந்திர ரெட்டி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
பதிவாளர் (மாவட்ட நீதித்துறை), உயர்நீதிமன்றம், சென்னை -104.
திரு.R.வெங்கடேஷ், இளநிலை உதவியாளர்
(த/பெ. திரு.ரவீந்திரநாத், அலுவலக உதவியாளர்(ஓய்வு))
[பதிவாளர் (மாவட்ட நீதித்துறை), உயர்நீதிமன்றம், சென்னை வழியாக]
நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(க்யூ)துறை, சென்னை-9
மனிதவள மேலாண்மைத்(ஜி)துறை, சென்னை-9
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/10/22
பிரிவு அலுவலர்
12/10/2022